# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 63/2020 தேதி-24.03.2026
(PW.1) – செல்வி

**3 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.ஞானக்கண் நாடாருக்கு மொத்தம் சென்ட் சொத்து உரிமைப்பட்டது என்றால் 40 சென்ட் சொத்தாகும். மேற்சொன்ன 40 சென்ட் சொத்து ஞானக்கண் நாடாருக்கு உரிமைப்பட்டது என்று எந்த ஆதாரத்தின் அடிப்படையில் சொல்லுகிறேன் என்றால் பூர்வீக சொத்தாகும். ஞானக்கண் நாடாருக்கு மொத்தம் 40 சென்ட் உரிமைப்பட்டது என்று வழக்கிற்காக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் மொத்தம் எவ்வளவு சென்ட் என்று எனக்கு தெரியாது.

2.ஞானக்கண் நாடாருக்கு சரஸ்வதி என்பவர் 40 சென்ட் சொத்தை எழுதிக் கொடுத்தாக சொல்லியுள்ள நிலையில் என் சொத்தின் எந்த திசையில் அமைந்துள்ளது என்றால் தெற்கு வடக்காக அமைந்துள்ளது. மேற்சொன்ன 40 சென்ட் தற்போது யார் கைவசம், யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு A பட்டிகை சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என் கணவர் விலை ஆவணத்தின் படி விலைக்கு வாங்கினார்.

3.மேற்சொன்ன சொத்து யாரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது என்றால் ஞானக்கண் நாடாரின் மகன் பத்ரோஸ் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. பத்ரோஸ் 18 சென்ட் சொத்தில் 1 சென்ட் சொத்தை நீக்கி தான் 17 சென்ட் சொத்தை விலைக்கு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன 1 சென்ட் என் சொத்தை தொட்டு வடக்கு பக்கத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். 1 சென்ட் சொத்திற்கு வடக்கே ஞானக்கண் நாடாரின் பூர்வீக சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். 1 சென்ட் சொத்து வழிபாதைக்காக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

4. நான் பனிமாதா தெருவில் எத்தனை ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் 8 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு விவரங்களை யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. வழக்கு A பட்டிகை சொத்தின் தெற்கே சகாய ஜார்ஜின் சொத்தை B பட்டிகை

சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். 3 வது பிரதிவாதியின் சொத்திற்கும் என்னுடைய சொத்திற்கும் இடையே அமோஸ் என்பவரின் சொத்து உள்ளது என்றால் சரிதான்.

5.நான் என்னுடைய பிராதில் வேண்டுமென்றே எல்கையில் அமோஸின் சொத்தை காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. என் சொத்தின் கிழக்கு மற்றும் மேற்கு பக்கங்களில் அமோஸின் சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். B பட்டிகை சொத்தின் வடக்கு பக்க எல்கையை தொட்டு வழக்கு A பட்டிகை சொத்து அமைந்துள்ளதாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன்கள் சேர்ந்து என் பெயருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.3 ஆவணமான கூட்டு விடுதலைப்பத்திரம் என்றால சரிதான்.

6.வா.சா.ஆ.3 ஆவணம் உரிமைக்கும், அவகாசத்திற்கும் எதிராக எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் "கூட்டாக உரிமைப்பட்ட சொத்தை நாங்கள் கூட்டாக பராமரிப்பதிலும், அனுபவம் எடுப்பதிலும் பல இடையூறுகள் வருவதால் எங்களுடைய வீதம் பிரிவின்றி நான்கில் மூன்று பாகம் (3/4 பாகம்) உரிமையை கூட்டு உரிமைதாரரான மேற்படியாருக்கு விட்டுக் கொடுத்திருப்பதால் மேற்படியார் எங்களுடைய வீதம் பிரிவின்றி நான்கில் மூன்று பாகம் சொத்தை மேற்படியாருடைய வீதத்துடன் சேர்த்து இன்று முதல் கிரய விக்கிரய சர்வ சுதந்திர உரிமையுடன்" என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் சொத்தின் விவரத்தில் மொத்த சொத்தான 17 சென்ட் சொத்து என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7.என் கணவரின் விலை ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் எல்கையும், வா.சா.ஆ.3 ஆவணமான கூட்டு விடுதலைபத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் எல்கையும் கிழக்கு பக்க எல்கைகள் தவிர மற்ற எல்கைகள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு எவ்வித உரிமையும் கோர முடியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

8.3 வது பிரதிவாதியின் சொத்து, என்னுடைய சொத்தை விட குறைந்தது 12 அடி தாழ்வாக இருக்குமா என்றால் சரிதான், சாட்சி தற்போது எவ்வளவு அடி தாழ்வாக இருக்கும் என்று தெரியாது என்று மாற்றி சொல்லுகிறார். 3 வது பிரதிவாதியின் கண்டத்தின் வழியாக நான் ஒரு காலத்திலும் பாதையாக பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல, நான் வழியாக பயன்படுத்தியுள்ளேன். 3 வது பிரதிவாதியின் கண்டத்தில் இருந்து என் கண்டத்திற்கு செல்ல வேண்டும் என்றால் 12 அடி உயரும் உள்ள ஏணி வைத்து தான் ஏற முடியும் என்றால் சரியல்ல.

9.3 வது பிரதிவாதி விலைக்கு வாங்கும் போதே பவுண்டேஷன் போடப்பட்டு தான் இருந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன பவுண்டேஷன் 3 வது பிரதிவாதிக்கு விலைக்கு கொடுத்த நபர் அமைத்த பவுண்டேஷன் என்றால் சரிதான், பாதையை அடைத்த பிறகு போடப்பட்ட பவுண்டேஷன். 3 வது பிரதிவாதி ஆன்டனி என்பவரிடமிருந்து தான் விலைக்கு வாங்கினார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 2015 ஆம் ஆண்டில் பவுண்டேஷன் அமைந்த பிறகு ஆன்டனியிடமிருந்து 3 வது பிரதிவாதி விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான்.

10. மேற்சொன்ன பவுண்டேஷனிற்கும், காம்பவுண்ட் சுவருக்கும் இடையே எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் இருசக்கர வாகனம் சென்று வரும் அளவிற்கு இடைவெளி இருக்கும். இருசக்கர வாகனம் செல்ல வேண்டும் என்றால் குறைந்தது 4 அடி இடைவெளி இருக்க வேண்டுமென்றால் சரிதான். ஆன்டனி அமைத்த பவுண்டேஷனிற்கு மேலே வீடு அமைத்தால் அந்த இடைவெளி அடைந்துவிடும் என்றாலும், அந்த இடைவெளி வீட்டின் பராமரிப்பிற்கு தேவைப்படும் என்றால் சரியல்ல.

11. 3 வது பிரதிவாதியின் கண்டத்திற்கு வடக்கே காம்பவுண்ட் மற்றும் முள்வேலி அமைந்துள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, உள்ளே செல்ல முடியாது. காம்பவுண்ட், முள்வேலி மற்றும் பவுண்டேஷன் வரைக்கும் 20 ஆண்டுகளுக்கு முன்பே ஆன்டனி என்பவரால் அமைக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ரோட்டினை பார்த்து 3 வது பிரதிவாதிக்கு விலைக்கு கொடுத்த ஆன்டனி ஒரு இரும்பு கேட் அமைந்திருந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான்

ஒரு காலத்திலும் B பட்டிகை சொத்தினை வழிப்பாதையாக பயன்படுத்தவில்லை என்றாலும், பயன்படுத்த முடியாது என்றால் சரியல்ல. ஞானக்கண் நாடாரின் வாரிசுகளுக்கு என் சொத்தின் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு பகுதியில் சொத்து அமைந்துள்ளது என்றாலும், அதில் தான் எனக்கு பாதை உரிமையுள்ளது என்றால் சரியல்ல. நான் ஆணையரை சுவாதீனப்படுத்தி உண்மைக்கு மாறாக பாதை இருப்பதாக பொய்யான அறிக்கையை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

12. நீதிமன்ற ஆணையரை மேற்சொன்ன இரும்பு கேட்டை உடைத்து, சேதப்படுத்தி தான் ஆணையரை வழக்கு பட்டிகை சொத்திற்குள் அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. என் கண்டத்திலிருந்து 3 வது பிரதிவாதியின் கண்டம்12 அடி உயரமாக அமைந்துள்ள நிலையில் அதை பாதையாக பயன்படுத்தியதாக சொல்வது வழக்கிற்காக சொல்லப்படும் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல.